தினமலர்
கம்ப்யூட்டர் மலர்
டிசம்பர் 13, 2010 இதழுடன் இணைப்பு

விண்டோ எக்ஸ்பி-விஸ்டா சில ரகசியங்கள்

இந்திய கிராம மாணவர்கள் சோதித்த டேப்லட் பிசி

விண்டோ எக்ஸ்பி கேள்விகளும் பதில்களும்

இணைய வேகத்தினை அதிகப்படுத்த

டேப்ளட் பிசி சந்தையில் புதிய ஐ-பேட்

மல்ட்டி டச் ஸ்கிரீன் டேப்ளட் பிசி விற்பனைச் சந்தையில் தற்போது சூடு பறக்கத் தொடங்கி உள்ளது. சாம்சங் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனம் தன் காலக்ஸி டேப் என்னும் டேப்ளட் பிசியினை அறிமுகப்படுத்திய பின்னர், ஆப்பிள் நிறுவனம் தன் புதிய ஐ-பேட் சாதனத்தை, கொரியாவில் விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. நவீன மனிதனின் டிஜிட்டல் வாழ்க்கையில் இது ஒரு புரட்சிகரமான மாற்றத்தினை ஏற்படுத்தும் என கே.டி. நிறுவன அதிகாரி தெரிவித்துள்ளார். இந்த நிறுவனம் கொரியாவில் ஆப்பிள் சாதனங்களை விற்பனை செய்திடும் உரிமையைப் பெற்றுள்ளது. புதிய ஐ-பேட் சாதனத்தை வாங்கிட, மக்கள் காலை 4 மணியிலிருந்து காத்திருந்ததாக தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கே.டி. நிறுவனம் ஐ-பேட் வாடிக்கையாளர்களுக்கு மட்டும் என பல மின் நூல்கள், சிறுவர்களுக்கான காமிக்ஸ், ஆறு செய்தித் தாட்கள், நூறு வார மாத இதழ்கள் ஆகியவற்றை இணைத்துத் தந்துள்ளது. இத்துடன் நிதி நிர்வாகம், கல்வி மற்றும் இசை சார்ந்த பல புரோகிராம்களும் தரப்பட்டுள்ளன.

சாம்சங் கேலக்ஸி டேப் டேப்ளட் பிசி இதுவரை தன் விற்பனையில் 7 லட்சம் என்ற இலக்கினைத் தாண்டியுள்ளது. ஐ-பாட் விற்பனை 40 லட்சத்தினைத் தாண்டியுள்ளது. வரும் 2014 ஆம் ஆண்டில் டேப்ளட் பிசி மார்க்கட், ஆறு மடங்கு உயர இருக்கிறது. 2010 ஆம் ஆண்டில் 76 லட்சம் டேப்ளட் பிசிக்கள் விற்பனையாகிய நிலையில், 2014ல் இது 4 கோடியே 60 லட்சத்தினை எட்டும் என்று ஓர் ஆய்வு தெரிவிக்கிறது. இதனை அறிந்தே, எல்.ஜி. எலக்ட்ரானிக்ஸ், மோட்டாரோலா, லெனோவா போன்ற நிறுவனங்கள், டேப்ளட் பிசிக்களைத் தயாரித்து விற்பனைக்கு வழங்க திட்டங்களை அறிவித்துள்ளனர்.

உள்ளே

விண்டோஸ் எக்ஸ்பி- விஸ்டா சில ரகசியங்கள் பக்கம் 3

டிவைஸ் மேனேஜர் பக்கம் 9

இந்திய கிராம மாணவர்கள் சோதித்த டேப்ளட் பிசி பக்கம் 13

வாசகர்களே . . . கம்ப்யூட்டர் நூல்கள்

உங்கள் கேள்வி, சந்தேகம், கருத்துக்களை அனுப்புகையில் அந்தந்தப் பகுதியின் தலைப்புகளை குறிப்பிடவும்.

கம்ப்யூட்டர் மலரில் இன்னும் என்ன தகவல்கள் வேண்டும் என்ற உங்களின் எதிர்பார்ப்பையும் எழுதுங்கள்.

கம்ப்யூட்டர் தொடர்பான நூல், 'சி.டி.'க்களை கம்ப்யூட்டர் மலரில் வெளியிட 2 பிரதிகளை அனுப்பவும்.

2010 ஏப்ரல் பிறகு உள்ள 'சிடி'க் களை மட்டும் அனுப்பவும். 'சி.டி.' யை உருவாக்கியவர், தயாரித்த நிறுவனம், விலை, வெளியிட்ட நாள், கிடைக்கும் இடம் ஆகியவற்றை குறிப்பிடவும்.

விண்டோஸ் எக்ஸ்பி– விஸ்டா சில ரகசியங்கள்



விண்டோஸ் எக்ஸ்பி மற்றும் விஸ்டா இயக்கத் தொகுப்புகளைப் பயன்படுத்துவோருக்கு சில ரகசிய ட்யூனிங் டிப்ஸ் இங்கு தரப்படுகின்றன. இவை நம் இயக்க வேகத்தினை அதிகப்படுத்துவதுடன், நம் செயல்பாட்டிலும் சுவாரஸ்யத்தை தரும். நேரம் மிச்சம், திறன் அதிகரிப்பு, விண்டோஸ் தோற்ற மேம்பாடு ஆகியவை இந்த டிப்ஸ்களின் நோக்கம். இவற்றால் உங்கள் கம்ப்யூட்டருக்கு எந்த கேடுதலும் ஏற்படாது என்றாலும், உங்கள் முக்கியமான பைல்களுக்கு பேக் அப் எடுத்து வைத்துக் கொண்டு இந்த டிப்ஸ்களை இயக்கிப் பார்க்கவும்.

இந்த டிப்ஸ்களில் கண்ட்ரோல் பேனல் குறிக்கும் குறிப்புகள், உங்கள் கம்ப்யூட்டரில் கண்ட்ரோல் பேனல் கிளாசிக் வியூவில் இருப்பதாக எடுத்துக் கொண்டு தரப்படுகின்றன. ஸ்டார்ட் மெனு கிளிக் செய்து, கண்ட்ரோல் பேனல் சென்று, இடது மேலாக உள்ள ஒரு லிங்க்கில் கிளிக் செய்தால், கிளாசிக் வியூவிற்கு மாறிக் கொள்ளலாம்.

1. டாஸ்க் பார் ஐட்டம் அனைத்தையும் மொத்தமாக மூட (எக்ஸ்பி): டாஸ்க்பாரில் ஒன்றுக்கு மேற்பட்ட ஐட்டங்களையும், போல்டர்களையும் வைத்திருக் கிறீர்களா? இவை அனைத்தையும் மொத்தமாக ஒரே கிளிக்கில் மூடலாம். கண்ட்ரோல் கீயை அழுத்திக் கொண்டு, ஒவ்வொரு ஐட்டமாக, டபுள் கிளிக் செய்திடவும். பின்னர், ஏதேனும் ஒன்றில் ரைட் கிளிக் செய்து, எழுந்து வரும் மெனுவில், குளோஸ் குரூப் (Close Group) என்பதில் கிளிக் செய்திடவும்.

2. சிஸ்டம் ரெஸ்டோர் இடத்தைப் பெற (எக்ஸ்பி): உங்கள் ஹார்ட் டிஸ்க்கில் இடம் குறைவாக உள்ளது என்ற எச்சரிக்கைச் செய்தி வருகிறதா? எந்த ட்ரைவ் சென்று, எப்படிப்பட்ட பைல்களை நீக்கி இடம் மீட்பது என்று குழப்பமா? சிஸ்டம் ரெஸ்டோர் வசதிக்கென உள்ள இடத்தைக் குறைத்து, உங்கள் ஹார்ட் டிஸ்க் இடப் பிரச்னையைத் தற்காலிகமாக சமாளிக்கலாம். ஸ்டார்ட், கண்ட்ரோல் பேனல் சென்று, சிஸ்டம் ஐகானில் கிளிக் செய்திடவும். கிடைக்கும் விண்டோவில் ரெஸ்டோர் டேப்பில் கிளிக் செய்திடவும். அதில் உள்ள ஸ்லைடரைப் பயன்படுத்தி, எவ்வளவு ஹார்ட் டிஸ்க் இடத்தை மீட்கலாம் என்று பார்க்கவும். அடிக்கடி ஹார்ட் டிஸ்க்கில் உள்ள பைல்களுக்குப் பேக் அப் எடுக்கும் பழக்கம் உள்ளவராக இருந்தால், சிஸ்டம் ரெஸ்டோர் உங்களுக்குத் தேவை இல்லையே! எனவே இந்த வசதியை மொத்தமாக மூடிவிடலாம். இதற்கென ஒதுக்கப்பட்ட மொத்த இடமும் மிச்சமாகும்.

3. டாஸ்க் பாரில் வெப் ஷார்ட்கட் (விஸ்டா): இணைய தளங்களை வேகமாகத் திறக்க, டாஸ்க்பாரில் உள்ள காலி இடத்தில், ரைட் கிளிக் செய்திடவும். எழுந்து வரும் மெனுவில் Toolbars என்பதைத் தேர்ந்தெடுக்கவும். அதில் உள்ள அட்ரஸ் ஆப்ஷனில் கிளிக் செய்திடவும். இங்கு உங்கள் இணைய தள முகவரியினை டைப் செய்திடவும். விண்டோஸ் இப்போது அந்த இணைய தளத்தினை, உங்கள் பிரவுசரைத் திறந்து இயக்கிக் காட்டும்.

4. ரீசைக்கிள் பின்னைத் தாண்ட: அழிக்கப்படும் பைல்கள் ரீசைக்கிள் பின்னில் சென்று, அங்கு தொடர்ந்து இடத்தைக் கொண்டிருக்கும். இதனால் ஹார்ட் டிஸ்க் இடம் குறையலாம். எனவே ஒரு பைல் அறவே நீக்கப்பட வேண்டும்; அது ரீசைக்கிள் பின்னுக்குச் செல்லக் கூடாது என எண்ணினால், ஷிப்ட் அழுத்தி டெலீட் கீயை அழுத்தி, அந்த பைலை முற்றிலுமாக நீக்கவும்.

5. கம்ப்யூட்டரை யார் ஷட் டவுண் செய்வது? (எக்ஸ்பி): உங்கள் வீட்டில் அல்லது அலுவலகத்தில் உள்ள உங்களின் பெர்சனல் கம்ப்யூட்டரை, உங்களைத் தவிர மற்றவர்கள் ஷட் டவுண் செய்வதனைத் தடுக்க, ஸ்டார்ட், கண்ட்ரோல் பேனல் சென்று, Administrative Tools செல்லவும். இங்கு Local Policies என்பதில் டபுள் கிளிக் செய்திடவும். பின்னர் Security Options என்பதைத் தேர்ந்தெடுக்கவும். வலது புறம்,'Shutdown: allow system to be shut down without having to log on' என்று இருக்கும் இடம் சென்று அதில் டபுள் கிளிக் செய்திடவும். அதன் பின்னர் Disabled என்பதைத் தேர்ந்தெடுக்கவும்.

6. டிஸ்க் ட்ரைவ் மூலம் நேரத்தை மிச்சப்படுத்த (எக்ஸ்பி): உங்களுடைய சிடி அல்லது டிவிடி ட்ரைவிற்கான ஐகானை குயிக் லாஞ்ச் பாரில் வைக்கவும். இதற்கு மை கம்ப்யூட்டர் சென்று, சிடி/டிவிடி ஐகான இழுத்து வந்து, டாஸ்க்பாரில் குயிக் லாஞ்ச் ஏரியாவில் விடவும். இதன் மூலம், சிடியில் எழுதப்படக் காத்திருக்கும் பைல்களை, இந்த குயிக்லாஞ்ச் பாரில் உள்ள ட்ரைவ் ஐகானைக் கிளிக் செய்து பார்க்கலாம். ட்ரைவ் ட்ரேயினைத் திறக்கவும் செய்திடலாம். இதே போல எந்த ஒரு பைலுக்கும், போல்டருக்கும் ஷார்ட் கட் ஐகான்களை, குயிக் லாஞ்ச் பாரில் வைத்து இயக்கலாம்.

7. எர்ரர் ரிப்போர்ட் நிறுத்த (எக்ஸ்பி): ஏதாவது புரோகிராம் கிராஷ் ஆகி, அதனை வலுக்கட்டாயமாக மூடிடுகையில், விண்டோஸ் இதற்கான ரிப்போர்ட்டைத் தயார் செய்து அனுப்பவா என்ற பிழைச் செய்தியினைக் காட்டும். இந்த பிழைச் செய்தியினைக் காட்டாமல் இருக்கும்படி விண்டோஸ் எக்ஸ்பி இயக்கத்தினை அமைக்கலாம். ஸ்டார்ட், கண்ட்ரோல் பேனல், சிஸ்டம் எனச் செல்லவும். அங்கு கீழாக உள்ள எர்ரர் ரிப்போர்டிங் பட்டனில் (Error Reporting) கிளிக் செய்திடவும். இங்கு இந்த பிழைச் செய்தி தோன்றுவதனை நிறுத்தவும், மீண்டும் இயக்கவும் செய்திடலாம்.

8.கீ போர்ட் ஷார்ட்கட் கீகள் (விஸ்டா): பொதுவான சில இயக்கங்களை வேகப்படுத்தும் வகையில் விஸ்டா இயக்கம் பல ஷார்ட்கட்கீ தொகுப்புகளைக் கொண்டுள்ளது. எடுத்துக்காட்டாக, விண்டோஸ் கீயினை அழுத்தியவாறே, ஸ்பேஸ் பார் தட்டினால், பின்னணியில் இருக்கும் ஸைட்பார், முன்னதாகக் கொண்டு வரப்படும். விண்டோஸ் கீயுடன் 'T'கீயை அழுத்தினால், டாஸ்க் பார் ஐட்டங்கள் ஒவ்வொன்றாகச் செல்லலாம். குயிக் லாஞ்ச் பாரில் உள்ள புரோகிராம்களை இயக்க, விண்டோஸ் கீயுடன், குயிக் லாஞ்ச் பாரில், திறக்கப்பட வேண்டிய புரோகிராம் எந்த இடத்தில் உள்ளதோ (1,2,3,4.. என) அந்த எண்ணை அழுத்தினால் போதும்.

9. கூடுதல் கடிகாரம் (விஸ்டா): பன்னாடுகளின் அப்போதைய நேரத்தினை எப்போதும் அறிந்து கொள்ள விருப்பமா? நோட்டிபிகேஷன் ஏரியாவில் உள்ள கடிகாரத்தின் மீது ரைட் கிளிக் செய்திடவும். பின்னர் 'Adjust Date/Time' என்பதனைத் தேர்ந்தெடுக் கவும். அடுத்து Additional Clocks என்பதில் கிளிக் செய்திடவும். இனி, ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கடிகாரங்களைக் காட்டுவதற்கான ஆப்ஷனைத் தேர்ந்தெடுக்கவும். ஒவ்வொரு கடிகாரத்திற்குமான நேர மண்டலத்தை அமைத்துப் பின்னர் ஓகே கிளிக் செய்திடவும். இனி திரையில், உங்களுக்குப் பிரியமானவர்கள் வசிக்கும் நாட்டின் கடிகாரம், அந்த நாட்டின் நேரத்தைக் காட்டியபடி இயங்கிக் கொண்டிருக்கும்.

10. ஹெல்த் ரிப்போர்ட் பெற (விஸ்டா): கம்ப்யூட்டரின் ஹார்ட்வேர் மற்றும் பிற சாதனங்கள் குறித்த ஹெல்த் ரிப்போர்ட்டினைப் பெறும் வசதியினை விஸ்டா கொண்டுள்ளது. இதன் மூலம் நம் ஹார்ட்வேர் சாதனங்களின் தன்மையை அறிந்து கொள்ளலாம். ரிப்போர்ட் ஜெனரேட்டர் என்ற வசதியின் மூலம் இதனைப் பெறலாம். ஸ்டார்ட் கிளிக் செய்து, performance and information என டைப் செய்து, என்டர் தட்டவும். இங்கு இடது புறமாக உள்ள 'Advanced tools'என்பதில் கிளிக் செய்து,'Generate a system health report' என்பதைத் தேர்ந்தெடுக்கவும். சிறிது நேரம் கழித்து, உங்கள் கம்ப்யூட்டரின் ஹார்ட் வேர் குறித்த ஹெல்த் ரிப்போர்ட் உங்களுக்கு பைலாகக் கிடைக்கும்.

விண்டோஸ் எக்ஸ்பி - கேள்விகளும் பதில்களும்

விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டம் இயங்குவது குறித்த சந்தேகங்கள் வாசகர்களிடமிருந்து தொடர்ந்து வருகின்றன.

பலருக்கு தொலைபேசி மூலம் தீர்வுகளும் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு சில பிரச்னைகள் குறித்து பல வாசகர்கள் எழுதியுள்ளனர். அப்படிப்பட்ட பொதுவான பிரச்னைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் இங்கு காணலாம்.

கேள்வி-1: சென்ற வாரம் நண்பர் ஒருவரிடம் இருந்து செகண்ட் ஹேண்ட் பெர்சனல் கம்ப்யூட்டர் ஒன்றை, வீட்டில் இரண்டாவதாக இருக்கட்டும் என்று வாங்கினேன். அதில் விண்டோஸ் எக்ஸ்பி பதியப்பட்டு இயங்கிக் கொண்டிருந்தது. அதற்கான லைசன்ஸ் எண் அதன் கேபினட்டில் ஒட்டப் பட்டுள்ளது. ஆனால் ஒரிஜினல் விண்டோஸ் சிடி தரப்படவில்லை. இப்போது பிரச்னை என்னவென்றால், அதன் ஹார்ட் டிஸ்க் கெட்டுப் போயுள்ளது. நான் புதிய ஹார்ட் டிஸ்க் ஒன்றை வாங்கி இணைக்க எண்ணுகிறேன். இதற்கென வேறு ஒரு நண்பரிடம் உள்ள, லைசன்ஸ் தரப்பட்டுள்ள, விண்டோஸ் எக்ஸ்பி சிடி வாங்கி இதில்

பபர் நினைவகம்

கம்ப்யூட்டரில் தகவல்கள் தொடர்ந்து எந்த விதமான தடையுமின்றி சென்று கொண்டிருக்க பபர் ("Buffer") என்னும் நினைவகம் தேவைப்படுகிறது. அடிப்படை யில் இது ஒரு நினைவகமே. இது ஹார்ட்வேர் சாதனமாகவும் இருக்கலாம். அல்லது சாப்ட்வேர் புரோகிராம் வழங்கும் நினைவகமாகவும் இருக்கலாம்.

ஸ்ட்ரீமிங் ஆடியோ வழியாக நீங்கள் ஒரு பாட்டைக் கேட்கிறீர்கள் என்றால் உங்களுக்கு இசை வருமுன்னரே அதற்கான சிக்னல் தகவல்கள் பபர் நினைவகத்தை வந்தடையும். கீழ்க் குறித்த வகையில் இது செயல் படுகிறது. உங்களுடைய ஆடியோ புரோகிராம் சில நொடிகளுக்கான ஆடியோ சிக்னல்களை அவற்றை இசைக்கு முன்னரே சேர்த்து வைத்துக் கொள்கிறது. நீங்கள் கேட்கும் இசை சிறிது தாமதமாக வந்தாலும் அதனை உங்களால் உணர முடியாது. ஏனென்றால் நீங்கள் கேட்டுக் கொண்டிருக்கும் இசைக் கான டேட்டா இரண்டு விநாடி களுக்கு முன்னரே வந்ததாகும். இந்த வகையில் பபர் நினைவகம் தகவல்களைத் தேக்கி வைத்து உதவுகிறது. இதனை இடைநிலை நினைவகம் என்றும் கூறலாம்.

"கவனத்திற்கு"

ISP - Internet Service Provider: இன்டர்நெட் இணைப்பு தந்து இன்டர்நெட் தளங்களைப் பார்வையிட வசதி தரும் ஒரு நிறுவனம். இந்த இணைப்பு நேரடியாக கம்பி இணைப்பாகவோ அல்லது தொலைபேசி வழியாகவோ அல்லது வயர்லெஸ் மோடம் வழியாகவோ இருக்கலாம்.

ரீ-இன்ஸ்டால் செய்திடலாமா?

பதில்: ஒரு இன்ஸ்டலேஷன் டிஸ்க் இல்லாமல், கம்ப்யூட்டர் வழங்கும் நிறுவனத்திடமிருந்து வருகையிலேயே, அதில் விண்டோஸ் எக்ஸ்பி பதியப்பட்டிருந்தால், அதனை ஓ.இ.எம்.சாப்ட்வேர் (OEM - original equipment manufacturer) என்று சொல்வார்கள். இதன் பொருள், அதில் தரப்பட்டுள்ள விண்டோஸ் எக்ஸ்பி சிஸ்டத்தினை, அந்த கம்ப்யூட்டரில் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்பது வர்த்தக ரீதியான ஓர் உடன்பாடு. ஹார்ட் டிஸ்க்கினை மாற்றுவதால், அது புதிய கம்ப்யூட்டராக மாறாது. எனவே எக்ஸ்பி சிடி ஒன்றைப் பயன்படுத்தி, கேபினில் ஒட்டப்பட்டுள்ள லைசன்ஸ் குறியீடு எண் அடிப்படையில் சிஸ்டத்தினை இன்ஸ்டால் செய்திடலாம்.

கேள்வி-2: என் விண்டோஸ் எக்ஸ்பி கம்ப்யூட்டர், எப்போதும் ஒரு டிஸ்க் செக் திரையைக் காட்டுகிறது. 'broken links' மற்றும் 'truncated files' என சில பிரச்னைக் குரிய செய்திகளைத் தருகிறது. அந்த பிரச்னைகள் பிக்ஸ் செய்யப்பட்டதாகவும் செய்தி வருகிறது. ஆனால் மறுபடியும் இதே எர்ரர் செய்தி வருகிறது.ரன் கட்டத்தில் chkdsk.exe பைலை இயக்கிப் பார்த்துவிட்டேன். மீண்டும் இதே கதைதான். பிரச்னை வருகிறது. ஆனால் பிக்ஸ் ஆகவில்லை.

பதில். chkdsk புரோகிராம் எர்ரர்களைக் காட்டும். அவற்றை பிக்ஸ் செய்யாது. அதாவது தீர்த்துவைக்காது. பிரச்னைகளை பிக்ஸ் செய்திடுமாறு நாம் தான் அதற்குரிய ஆப்ஷனைத் தர வேண்டும். இதற்கு விண்டோஸ் எக்ஸ்புளோரர் வழியாக இன்னொரு எளிய தீர்வு உள்ளது. ஸ்டார்ட் பட்டன் அழுத்தி, மை கம்ப்யூட்டர் தேர்ந்தெடுக்கவும். லோக்கல் டிஸ்க் Local disk (C:) என்று இருப்பதில் ரைட் கிளிக் செய்திடவும். பின்னர் கிடைக்கும் கீழ் விரி மெனுவில், Properties தேர்ந்தெடுக்கவும். தோன்றும் விண்டோவில், Tools டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும். இதில் Check Now என்பதில் கிளிக் செய்திடவும். மீண்டும் தரப்படும் விண்டோவில் இரண்டு ஆப்ஷன்களையும் தேர்ந்தெடுத்து பின்னர் Start என்பதில் கிளிக் செய்திடவும். மீண்டும் பிரச்னை தொடர்கிறது என்றால், தயவு செய்து ஹார்ட் டிஸ்க்கினை மாற்றவும். முக்கியமான பைல்களை உடனடியாக, நல்லதொரு மீடியாவில் பேக் அப் எடுத்து, ஹார்ட் டிஸ்க்கினை மாற்றவும். புதிய ஹார்ட் டிஸ்க்கினை இன்ஸ்டால் செய்த பின்னர், பேக் அப் செய்த பைல்களைக் காப்பி செய்துவிடலாம்.

கேள்வி-3: என் விண்டோஸ் எக்ஸ்பி பாஸ்வேர்டினை மறந்துவிட்டேன். லாக் இன் ஸ்கிரீன் அடுத்து என்னால் செல்ல முடியவில்லை. இதனை மீண்டும் பெறும் வழி என்ன?

பதில்: பெரும்பாலான எக்ஸ்பி கம்ப்யூட்டர்களில், அட்மினிஸ்ட்ரேட்டர் அக்கவுண்ட்டில் பாஸ்வேர்ட் இருப்பதில்லை. எனவே உங்கள் User Account (யூசர் அக்கவுண்ட்) பாஸ்வேர்டை மாற்ற இதனைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். இதற்கு, முதலில் கம்ப்யூட்டரை ஆப் செய்துவிட்டு, (Safe Mode) சேப் மோடில் ஸ்டார்ட் செய்திடவும். கம்ப்யூட்டரை ஸ்டார்ட் செய்து, விண்டோஸ் லோகோ வரும் முன் F5 அழுத்தவும். அப்போது கிடைக்கும் மெனுவில், சேப் மோட் தேர்ந்தெடுக்கவும். லாக் இன் ஸ்கிரீன் தோன்று கையில், Administrator (அட்மினிஸ்ட்ரேட்டர்) என்று ஒரு எக்ஸ்ட்ரா ஐகான் தோன்றும். இதில் கிளிக்

டெக்ஸ்ட் தேர்ந்தெடுக்க எளிய வழி

டாகுமெண்ட் ஒன்றில் டெக்ஸ்ட் தேர்தெடுக்க, தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய இடத்தில் கர்சரை வைத்து, பின்னர் ஷிப்ட் கீயை அழுத்தியவாறே, கர்சரை இழுக்கிறோம். டெக்ஸ்ட் தேர்ந்தெடுக்கப்படுகிறது. இதற்கு மாற்றாக, இன்னொரு எளிய வழி ஒன்று உள்ளது. இதன் மூலம் ஷிப்ட் கீயை அழுத்தாமல், நாம் டெக்ஸ்ட்டைத் தேர்ந்தெடுக்கலாம்.

வழக்கம் போல டெக்ஸ்ட் தொடங்கும் இடத்தில் கர்சரை வைத்துக் கொள்ளவும். பின் எப்8 கீயை அழுத்தவும். இனி உங்கள் கர்சர் செல்லும் இடமெல்லாம் உள்ள டெக்ஸ்ட் தொடர்ந்து செலக்ட் ஆகிக் கொண்டே இருக்கும். செலக்ஷன் பணியினை முடிக்க எஸ்கேப் கீயை அழுத்தவும். இனி செலக்ட் செய்யப்பட்ட டெக்ஸ்ட்டில் என்ன செயல்பாடுகளை மேற்கொள்ள வேண்டுமோ அவற்றை மேற்கொள்ளலாம்.

செய்து, விண்டோஸ் டெஸ்க்டாப் தோன்றும் வரை காத்திருக்கவும். பின்னர், Start,Control Panel, User Accounts (ஸ்டார்ட், கண்ட்ரோல் பேனல், யூசர் அக்கவுண்ட்ஸ்) எனச் செல்லவும். இதில் உங்கள் அக்கவுண்ட்டினைத் தேர்ந்தெடுத்து, 'Change the password' என்பதில் கிளிக் செய்திடவும்.

கேள்வி – 4 : விண்டோஸ் எக்ஸ்பியில் வரும் தேவையற்ற ஒலிகளை, திறக்கும்போது, ஷட் டவுண் செய்திடுகையில், டயலாக் பாக்ஸ் மற்றும் பிற மெனுக்களில் செலக்ஷன் செய்திடுகையில் ஏற்படும் ஒலிகளை நிறுத்த முடியுமா? அல்லது குறைத்து வைத்திட முடியுமா?

பதில்: Start பட்டன் அழுத்தி Control Panel செல்லவும். அடுத்து Sounds, Speech, and Audio Devices என்று இருப்பதில் கிளிக் செய்திடவும். இதில் கிடைக்கும் வழியைக் கொண்டு சிஸ்டம் வால்யூம் என்பதன் அளவைத் தேவைப்படும் அளவிற்கு மாற்றவும். உங்கள் கண்ட்ரோல் பேனல் Classic வியூவில் இருந்தால், Sounds and Audio Devices என்பதில் டபுள் கிளிக் செய்திடவும். அடுத்து Volume டேப்பினைத் தேர்ந்தெடுக்கவும். இதில் தரப்பட்டுள்ள ஆப்ஷன்களில் Mute என்னும் ஆப்ஷனை டிக் செய்வதன் மூலம் தேர்ந்தெடுத்தால், எந்த ஒலியும் உங்கள் ஸ்பீக்கர்களில் கேட்காது. Sounds டேப்பில் கிளிக் செய்தால்,விண்டோஸ் சிஸ்டத்தில் உள்ள பலவகையான சவுண்ட் அலர்ட் இருப்பதைக் காணலாம். பின்னர் Programs பிரிவில். Windows event என்பதில் லெப்ட் கிளிக் செய்து, அதில் Sounds ட்ராப் டவுண் மெனுவில் None என்பதனைத் தேர்ந்தெடுத்தால், குறிப்பிட்ட புரோகிராம்களுக்கான ஒலி எதுவும் தரப்பட மாட்டாது. அனைத்து ஒலிகளையும் நிறுத்த, Sound scheme மெனுவில் No Sounds என்பதனைத் தேர்ந்தெடுத்து அனைத்தையும் உங்கள் விருப்பப்படி அமைத்த பின், ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

"கவனத்திற்கு"

Freeware: பெரும்பாலும் இன்டர்நெட்டிலிருந்து டவுண்லோட் செய்திடும் வகையில் கிடைக்கும் இலவச சாப்ட்வேர் புரோகிராம்கள். இதனை நீங்கள் பயன்படுத்துவதோடு மற்றவர்களுக்கும் வழங்கலாம். யாரும் தடை செய்ய மாட்டார்கள்.

ஆன்லைன் ஷாப்பிங் – சில எச்சரிக்கைகள்

விடுமுறை காலம் நெருங்குகிறது. புத்தாண்டு தொடங்க இருக்கிறது. பொங்கல் வர இருக்கிறது. மக்கள் தங்கள் மனங்கவர்ந்த, இதுவரை திட்டமிட்ட பொருட்களை வாங்கிக் குவிக்கப் போகிறார்கள். இந்த முறை, பெரும்பாலானவர்கள் பொருட்கள் வாங்கிட, இணையத்தின் துணையை நிச்சயம் நாடுவார்கள். இந்தியாவில் இணையம் வழியாக பொருட்கள் வாங்குவது அதிகரித்துக் கொண்டே செல்வதாக ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. இருப்பினும் இதில் நிறைய தில்லுமுல்லுகளும், திருட்டுகளும் அதிகரித்து வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே சற்று எச்சரிக்கையாக இதனை மேற்கொள்ள நாம் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளைப் பார்ப்போம்.

1. நம்பிக்கையான கடைகளின் இணைய தளங்கள் வழியே மட்டும் வாங்கவும். இவை தங்களின் முகவரிகளையும், தொலைபேசி எண்களையும் தந்திருப்பார்கள். அவற்றை முதலில் உறுதி செய்து கொள்ளவும்.

2. இணையத்தில் வாங்க இருப்பதால், அந்த பொருளின் படம் மற்றும் விற்பவர் அது குறித்து தரும் தகவல்கள் மட்டுமே நமக்குத் தெரிய வரும். இது போதாது. வாங்க விரும்பும் பொருள் குறித்து இணையத் தளங்களுக்குச் சென்று தகவல் தேடிப் பெறவும். அவற்றை ஏற்கனவே வாங்கியவர்கள், அதன் பயன் மற்றும் நம்பகத் தன்மை குறித்து இணையத்தில் எழுதி இருப்பார்கள். அவற்றைப் படித்துப் பார்க்கவும்.பொருளின் விலை மட்டும் பார்க்காமல், வரி, அவற்றை உங்களிடம் சேர்ப்பிக்க இணைய தள விற்பனை மையம் வசூலிக்கும் ட்ரான்ஸ்போர்ட் மற்றும் பேக்கிங் கட்டணம் போன்றவற்றையும் சேர்த்துப் பார்க்கவும்.

3. பொருள் பிடிக்காமல் போனால், அதனை மீண்டும் அந்த கடைக்காரர் எடுத்துக் கொள்வாரா? எடுத்துக் கொள்வார் எனில், அதற்கான நடைமுறை என்ன? என்பன போன்ற தகவல்களைப் பெறவும்.

4. ஆர்டர் செய்து வாங்க முடிவு செய்து, ஆன் லைனிலேயே ஆர்டர் கொடுத்தால், நீங்கள் ஆர்டர் கொடுக்கும் பக்கத்தினை எச்.டி.எம்.எல். பக்கமாக சேவ் செய்து வைக்கவும். உங்கள் வங்கி அட்டை எண், பணப் பரிவர்த்தனைக்குக் கொடுக்கப்படும் எண், நாள், பொருள் விலை மற்றும் பிற கட்டணங்கள் ஆகிய தகவல்கள் அனைத்தும் இருக்க வேண்டும்.

5.உங்களுடைய கிரெடிட் கார்ட் ஸ்டேட்மென்ட்டினை அடிக்கடி சோதனை செய்திடவும். நீங்கள் வாங்காத பொருளுக்கு ஏதேனும் பணம் எடுக்கப்பட்டுள்ளதா என்று பார்க்கவும்.

6. உங்கள் இல்ல மற்றும் நம்பிக்கையான அலுவலகக் கம்ப்யூட்டர் மூலமாக மட்டுமே ஆன்லைன் வர்த்தகத்தில் ஈடுபடவும். பொதுவான மையங்களில் இந்த வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்வதை அறவே தவிர்க்கவும்.

7.உங்கள் பாஸ்வேர்டினைப் பாதுக்காக்கவும். மிகவும் உறுதியான பாஸ்வேர்டாக அமைத்து வைத்துக் கொள்ளவும். இதனையும், அடிக்கடி மாற்றவும்.

8.பிரபலமான கடைகளின் இணையத் தளங்கள் போலத் தோற்றமளித்து, ஆன்லைன் வர்த்தகத்தினை மேற்கொள்ள வழி தரும் மெயில்கள் மற்றும் தளங்களை நம்பக் கூடாது.

9. ஆன்லைன் வர்த்தக இணைய தளங்களின் முகவரியில் “https” என்ற முன்னொட்டு இருக்கிறதா எனச் சோதனை செய்திடவும். இது போல “http ” உடன் “s” இணைந்து இல்லை என்றால், சற்று சிந்திக்கவும். தயங்கவும்.

10.கூடுமானவரை டெபிட் கார்டுகளை ஆன்லைன் வர்த்தகத்தில் பயன்படுத்துவதனைத் தவிர்க்கவும். கிரெடிட் கார்டுகளுக்குக் கூடுதல் பாதுகாப்பு உண்டு.

11. கூடுதல் சலுகைகள், அதிரடி ஆபர்கள் என மெயில்கள் வந்தால், சற்று நிதானிக்கவும். இதெல்லாம், உங்களை சிக்க வைத்திடும் தூண்டில்கள். எனவே இவற்றை அலட்சியப்படுத்தவும்.

கம்ப்யூட்டர் பயன்படுத்துபவர்கள் அதிகம் பயன்படுத்தாத, ஆனால் நமக்கு நம் கம்ப்யூட்டரைப் பற்றி தகவல் செய்திடலாம்; ஹார்ட்வேர் செட்டிங்குகளை மாற்றிடலாம்;பிரச்னைகளை எளிதாக

டிவைஸ் மேனேஜர்

கிடைக்கும் ஓர் இடம் டிவைஸ் மேனேஜர். இதனைக் காண My Computer ஐகானை ரைட் கிளிக் செய்து Properties தேர்ந்தெடுக்கவும். அதில் உள்ள டேப்களில் Hardware என்ற டேபைக் கிளிக் செய்தால் கிடைக்கும் விண்டோவில் Device Manager என்ற பட்டனைக் கிளிக் செய்து டிவைஸ் மேனேஜரைப் பெறலாம்.

இங்கு கம்ப்யூட்டரில் உள்ள அனைத்து ஹார்ட்வேர் சாதனங்கள் குறித்தும் தகவல்களைக் காணலாம்.

மவுஸ், கீ போர்டு, மோடம், மானிட்டர், சவுண்ட் கார்ட் என அனைத்து ஹார்ட்வேர்களும் எப்படி ஒவ்வொன்றுடனும் இணைக்கப்படுகின்றன என்று இதில் தெரியவரும். அத்துடன் ஒவ்வொரு ஹார்ட்வேர் சாதனமும் எப்படி இயங்க வேண்டும் என்பதனையும் இதன் மூலம் சென்று நாம் செட் செய்திடலாம். இதன் மூலம் இந்த சாதனங்களுக்கான டிரைவர்களை அப்டேட் தீர்த்துவிடலாம். ஏதாவது ஒரு ஹார்ட்வேர் சாதனத்தில் பிரச்னை இருப்பதாகத் தெரிந்தால் டிவைஸ் மேனேஜர் சென்று அந்த குறிப்பிட்ட சாதனம் எப்படி கான்பிகர் செய்யப்பட்டிருக்கிறது என்று பார்த்து பிரச்னைகளைத் தீர்க்கலாம். தற்காலிகமாக அவற்றை நீக்கி மீண்டும் இன்ஸ்டால் செய்திடலாம். ஆனால் இவை எல்லாம் நன்றாகத் தெரிந்த பின்னரே இவற்றில் கை வைக்க வேண்டும். என்ன என்று தெரிந்து கொள்வதில் தவறில்லை. இங்கு கம்ப்யூட்டரில் உள்ள அனைத்து ஹார்ட்வேர் சாதனங்களும் இடம் பெற்றிருக்கும். ஏதாவது ஒரு சாதனத்தின் இயக்கநிலையை அறிய வேண்டும் என்றால் பட்டியலில் அதனைப் பார்த்து அதன் மீது இருமுறை கிளிக் செய்திடவும். அந்த சாதனத்துடன் தொடர்புடையவை எவை எனத் தெரியவரும். அதில் ஏதாவது ஒன்றில் ரைட் கிளிக் செய்து கிடைக்கும் மெனுவில் Properties தேர்ந்தெடுக்கவும். இப்போது கிடைக்கும் டேப்களில் General என்ற டேபைக் கிளிக் செய்தால் Device status பாக்ஸ் கிடைக்கும். இங்கு அந்த சாதனம் சரியாகச் செயலாற்றுகிறதா என்ற தகவல் கிடைக்கும். உங்களைப் பொறுத்தவரை அதில் பிரச்னை இருப்பதாகத் தெரிந்தால் Troubleshoot பட்டனை அழுத்தி பிரச்னையைச் சரி செய்வதில் முனையலாம்.



எக்ஸெல்: கீழாகக் கூட்டுத்தொகை

எக்ஸெல் ஒர்க்புக்கில் இதனைப் பலர் கவனித்திருக்க மாட்டீர்கள். ஒர்க்புக் ஒன்றில் சில செல்களில் எண்களை என்டர் செய்திருக்கிறீர்கள். திடீரென இவற்றின் கூட்டுத் தொகை என்னவென்று அறிய ஆவல். என்ன செய்வீர்கள்? இன்னொரு செல்லைத் தேர்ந்தெடுத்து அதில் குறிப்பிட்ட செல்களில் உள்ள எண்களைக் கூட்டுவதற்கான பார்முலாவினை அளிப்பீர்கள். அந்த பார்முலாவைப் பின்பற்றி நீங்கள் குறிப்பிட்ட செல்களில் உள்ள எண்களின் கூட்டுத் தொகை, பார்முலாவிற்கான செல்லில் எப்போதும் கிடைக்கும்.



இந்த ஏற்பாடு நிரந்தரமாக ஒரு குறிப்பிட்ட செல்லில் வேண்டும் என்றால் மேற்கொள்ளலாம். இடையே தற்காலிகமாக வேண்டும் எனில் எப்படி செயல்படலாம்? எக்ஸெல் அதற்கு வழி தருகிறது. நீங்கள் கூட்டிப் பார்க்க விரும்பும் செல்களின் எண்கள் உள்ள செல்களைத் தேர்ந்தெடுத்தாலே போதும். ஒர்க் ஷீட்டின் கீழாக ஸ்டேட்டஸ் பாரில் இந்த கூட்டுத் தொகை தானாகவே காட்டப்படும். நீங்கள் இதற்கு முன் இதனைக் கவனித்திருக்க மாட்டீர்கள். கீழாக ஸ்டேட்டஸ் பார் இல்லை என்றால் View மெனு சென்று Status Bar ஆப்ஷனை டிக் செய்திடவும். ஒன்றுக்கு மேற்பட்ட செல்களில் எண்களை வைத்துக் கொண்டு அவற்றைத் தேர்ந்தெடுக்கத் தொடங்கினாலே இந்த கூட்டுத் தொகை காட்டப்படும். இதில் என்ன வேடிக்கை என்றால், தேர்ந்தெடுக்கத் தொடங்கிய உடனேயே ஒவ்வொன்றாகக் கூட்டிக் காட்டப்படும். அதாவது, எடுத்துக் காட்டாக, எழு செல்களில் எண்களைத் தந்துள்ளீர்கள். முதல் இரண்டு செல்களைத் தேர்ந்தெடுத்தவுடனேயே, அதன் கூட்டுத்தொகை காட்டப்படும். அடுத்து ஒவ்வொன்றாகச் செல்லச் செல்ல, இந்தக் கூட்டுத்தொகை அதற்கேற்ப மாறும். கூட்டுத் தொகைக்கு முன் Sum என்று காட்டப்படும்.

"கவனத்திற்கு"

Reboot: (ரீபூட்)கம்ப்யூட்டரை மீண்டும் ஒரு முறை புதிதாக இயக்குதல். பொதுவாக இவ்வாறு மீண்டும் இயக்குவதை ஸ்டார்ட் மெனுவில் கிடைக்கும் ரீஸ்டார்ட் மூலம் இயக்குவார்கள். பெர்சனல் கம்ப்யூட்டரின் டவரில் ரீஸ்டார்ட் பட்டன் தரப்பட்டிருந்தாலும் அதனை அழுத்தியும் ரீஸ்டார்ட் செய்திடலாம் .

Client: கம்ப்யூட்டர் நெட்வொர்க்கில் இணைக்கப் பட்டு சர்வராக இயங்காமல் பயன்படுத்தப்படும் எந்த கம்ப்யூட்டரும் கிளையண்ட் என அழைக்கப்படும்.

Notification Area: கம்ப்யூட்டரில் எந்த எந்த புரோகிராம்கள் பின்னணியில் இயங்கிக் கொண்டிருக்கின்றன என்று கம்ப்யூட்டர் திரையில் காட்டப்படும் இடம்.

இணைய வேகத்தினை அதிகப்படுத்த

இணைய தளங்கள் உங்கள் கம்ப்யூட்டர்களில் வேகமாக இறங்கவில்லையா? கம்ப்யூட்டர் வாங்கிப் பழசாகிவிட்டது என்று மட்டும் எண்ணி, ஒன்றும் செய்திடாமல் இருந்துவிட வேண்டாம். கம்ப்யூட்டரின் வேகம், அதனை நாளுக்கு நாள் பயன்படுத்துகையில் ஏன் குறைகிறது என்றும், அதற்கான தீர்வுகள் என்ன என்ன என்றும், ஏற்கனவே இந்த பகுதியில் பார்த்திருக்கிறோம்.

இணைய வேகம் குறைய, கம்ப்யூட்டர் மட்டுமின்றி, வேறு சில விஷயங்களும் காரணமாக இருக்கலாம். அவற்றில் சிலவற்றிற்கான தீர்வுகளை இங்கு காணலாம்.

1.வெப் பிரவுசரை மாற்றுக: இன்னும் பலர் தொடர்ந்து இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பிரவுசர் தொகுப்பினையே பயன்படுத்தி வருகின்றனர். ஏனென்றால், அந்த பிரவுசர் தொகுப்பு விண்டோஸ் சிஸ்டத்துடன் வழங்கப் படுகிறது. ஆனால் இன்னொரு பிரவுசரைப் பயன் படுத்துவதில் எந்த பிரச்னையும் இல்லையே! வேறு ஒரு பிரவுசர் மூலம் இணையத்தில் நுழைந்து, தளங்கள் எவ்வளவு வேகமாக இயங்குகின்றன என்றும், அவற்றிலிருந்து பைல்கள் என்ன வேகத்தில் தரவிறக்கம் ஆகின்றன என்றும் பார்க்கலாமே!

தற்போது வந்திருக்கும் பல பிரவுசர்கள், வேகத்தினை முதன்மை அம்சமாகக் கொண்டு வடிவமைக்கப்பட்டுக் கிடைக்கின்றன. எடுத்துக் காட்டாக, கூகுள் தரும் குரோம் பிரவுசரைக் கூறலாம். இதனுடைய ஜாவா ஸ்கிரிப்ட் இஞ்சின் அதிக வேகத்தினைத் தரும் வகையில் ட்யூன் செய்யப்பட்டுக் கிடைக்கிறது. இந்த பிரவுசரைப் பெற http://www.google.com/chrome என்ற முகவரியில் உள்ள கூகுள் தளம் செல்லவும்.

2. இணைய விளம்பரங்கள் வேண்டாமே!: பல இணைய தளங்களில், விளம்பரங்கள், குறிப்பாக அனிமேஷன் படங்களுடன் காட்டப் படுகின்றன. இந்த தளங்களை டவுண்லோட் செய்கையில், இந்த விளம்பரங்களும் சேர்ந்து இறங்கி, பைலின் அளவை அதிகமாக்குகின்றன. இவற்றை நாம் வடிகட்டி விட்டால், விளம்பரங்கள் இல்லாத தளங்களை இறக்கிக் கொள்ளலாம். நீங்கள் பயர்பாக்ஸ் பிரவுசரைப் பயன்படுத்துபவராக இருந்தால், இவற்றை வடிகட்ட Flashblock add-on என்ற எக்ஸ்டென்ஷனைப் பயன்படுத்தலாம். இதனைப் பெற பயர்பாக்ஸ் பிரவுசரில், Tools மெனு சென்று, Add-ons என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். Add-ons கிடைத்தவுடன், அதில் உள்ள சர்ச் பாக்ஸில் Flashblock என டைப் செய்திடவும். இந்த ஆட் ஆன் தளம் கிடைத்தவுடன், Add to Firefox என்பதில் கிளிக் செய்திடவும். Flashblock இயங்கத் தொடங்கியவுடன் பயர்பாக்ஸ் பிளாஷ் மூலம் அமைத்த எதனையும் உங்கள் கம்ப்யூட்டரில் இறங்கவிடாது. பிளாஷ் வழி விளம்பரங்கள் இருக்கும் இடத்தில் 'F'என்ற எழுத்து மட்டும் காட்டப்படும். இதில் விளம்பரம் இருந்து தடுக்கப்பட்டிருந்தால், அப்படியே விட்டுவிடவும். இல்லாமல், ஏதேனும் சிறிய வீடியோ அனிமேஷனாக இருந்து, நீங்கள் அதனைப் பார்க்க விரும்பினால், இந்த எப் எழுத்து உள்ள கட்டத்தில் டபுள் கிளிக் செய்தால், பிளாஷ் வீடியோ அல்லது அனிமேஷன் லோட் ஆகும். இதன் மூலம் இணையப் பக்கங்கள் அதிவேகமாக டவுண்லோட் ஆவதனைப் பார்க்கலாம்.

3.மொபைல் இணையதளம் செல்க: இணைய தளங்களில், பிரித்துப் பார்க்க இயலாதவகையில் பல வகையான தகவல்கள் குப்பையாகத் தரப்பட்டுள்ளனவா? அவற்றில் உங்களுக்கானதைத் தேடி எடுப்பது சிரமமாக உள்ளதா? அப்படிப்பட்ட சூழ்நிலையில், அந்த இணைய தளத்திற்கான மொபைல் இணையதளம் உள்ளதா எனத் தேடவும். இப்போதெல்லாம், வழக்க மான இணைய தளங்களுக்கிணையாக, மொபைல் போன் வழி பயன்படுத்த, இத்தகைய இணைய தளங்கள் உருவாக்கப்பட்டுத் தரப்படுகின்றன. அவற்றில் குறைவான எண்ணிக்கையில் பைல்களுக்கான லிங்க்குகள் தரப்பட்டிருக்கும், இணைக்கப் பட்டிருக்கும். இவற்றைத் தேடி தரவிறக்கம் செய்வது எளிதாக இருக்கும். மேலும் இவற்றை டவுண்லோட் செய்திடும் முன், தளத்திலிருந்தவாறே பார்க்கவும் வசதி செய்து தரப்பட்டிருக்கும். இந்த மொபைல் தளங்களை எப்படிக் கண்டறிவது? வழக்கமான www என்பதற்குப் பதிலாக 'm' என்ற எழுத்தை இவை கொண்டிருக்கும். எடுத்துக் காட்டாக, பி.பி.சி. நிறுவனத்தின் மொபைல் போன் இணைய தளத்தின் முகவரி http://m.bbc.co.uk ஆகும். இவற்றை எப்படி அணுகுவது என்பதற்கான விவரங்களும் தரப்பட்டிருக்கும். இந்த வகை தளங்கள், சில

நொடிகளில் கம்ப்யூட்டர்களில் இறங்குவதைக் காணலாம்.

4.ஆர்.எஸ்.எஸ். ரீடரைப் பயன்படுத்தவும்: ஆர்.எஸ்.எஸ். என்பது (RSS-Really Simple Syndication) ஓர் இணைய தளம், புதிய விஷயங்களை இணைக்கும் போது, அதற்கான செய்தியைத் தந்து நம்மை நினைவூட்டும். இவற்றில் பல வேளைகளில், தகவலுக்கான தலைப்பு வரிகள் மட்டுமே இருக்கும். சில தளங்கள், புதிய தகவலை, அவை அடங்கியுள்ள கட்டுரையை மட்டும் அப்படியே தரும். ஆரஞ்சு நிறத்தில் ஆர்.எஸ்.எஸ். இமேஜ் ஐகான் இணைய தளம் ஒன்றில் இருந்தால், புதிய செய்திகள் வந்துள்ளன என்று பொருள். பயர்பாக்ஸ் போன்ற பிரவுசர்கள், இந்த ஐகானை அதன் அட்ரஸ் பாரிலேயே காட்டுகின்றன. அதில் கிளிக் செய்தால், பிரவுசர் அந்த தளத்தின் ஆர்.எஸ்.எஸ். வகை செய்தியினை இறக்கிக் காட்டும்.

5. வேகப்படுத்தும் புரோகிராம்கள்: இணையத்தில் கிடைக்கும் சில புரோகிராம்கள், உங்கள் இன்டர்நெட் தளங்கள் இறங்குவதனையும், பல்கள் தரவிறக்கம் செய்யப்படுவதனையும் வேகமாக்கும். இந்த வகையில் ஆன்ஸ்பீட் (Onspeed) என்ற (http://portal.onspeed.com/) புரோகிராம் நமக்கு உதவும். வேறு பல புரோகிராம்களும் இணையத்தில் கிடைக்கின்றன. இவை டெக்ஸ்ட்டை கம்ப்ரஸ் செய்து, இமேஜ் தன்மையைக் குறைத்து பைலின் அளவைக் குறைக்கின்றன. ஆனால் ஸ்ட்ரீமிங் வீடியோ போன்றவை உள்ள தளங்களில், இத்தகைய புரோகிராம்களின் பணி எடுக்காது.

6.கேஷ் மெமரியைக் காலி செய்க: அனைத்து பிரவுசர்களும், நாம் சென்று பார்த்த தளங்கள் குறித்த தகவல்களைத் தங்கள் கேஷ் மெமரியில் வைத்துக் கொள்கின்றன. இவற்றை அவ்வப்போது காலி செய்வதனால், நம் பிரவுசரின் வேகம் குறையாது. அதே போல தற்காலிகமாகச் சேமித்து வைக்கப்படும் (Temporary Files) பைல்களையும் நீக்க வேண்டும்.

7.பார்க்காத தளங்களை மூடுங்கள்: சிலர் இணைய உலாவினைத் தொடங்கிப் பல தளங்களுக்குச் சென்று கொண்டே இருப்பார்கள். இதனால் பல தளங்கள் திறக்கப்பட்டு மூடப்படாமல் இருக்கும். எப்போதும் இணையத்தில் இருக்கும் ஒரு சிலர் இருபதுக்கும் மேற்பட்ட தளங்களைத் திறந்து வைத்து இயக்குவதனைப் பார்த்திருக்கிறேன். இவை இணைய வேகத்தினை நிச்சயம் குறைத்திடும். எனவே எப்போது ஓர் இணைய தளத்தினைப் பார்த்து முடித்து விட்டோமோ, உடனே அந்த தளத்தினை மூடுவது நல்லது.

இந்திய கிராம மாணவர்கள் சோதித்த டேப்ளட் பிசி

ஏறத்தாழ ஒரு கோடி இந்திய கிராம மாணவர்கள் வசிக்கும், அளிக்கப்படாத சூழ்நிலையில் எப்படி பயன் படுத்தினார்கள் என்ற கேள்வி எழலாம். இந்த டேப்ளட் பிசிக்கள், சூரிய ஒளியில் உற்பத்தியாகும் மின்சாரத்தைக் கொண்டு இயங்கும் பிசிக்கள். இந்த சோலார் டேப்ளட் பிசியினை, ரைஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கிருஷ்ணா பாலம் என்பவர் உருவாக்கி யுள்ளார். இவரின் உருவாக்கத்திற்குப் பின், சிங்கப்பூரில் உள்ள நான்யாங் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம், கிராமங்களுக்கான வளர்ச்சி மற்றும் கற்றல் குறித்த பவுண்டேஷன் அமைப்பு மற்றும் ஸ்விட்சர்லாந்தின் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் மைக்ரோ டெக்னாலஜி மையம் இணைந்து இந்த சோலார் டேப்ளட் பிசிக்கு வடிவம் கொடுத்து, சோதனை செய்வதற்காக, இந்திய கிராம மாணவர்களுக்கு அதனைப் பயன் படுத்தும் முறைகளைக் கற்றுக் கொடுத் துள்ளது. 10 லிருந்து 13 வரையிலான வயதுள்ள மாணவர்கள் இதனை ஆர்வத் துடன் கற்றுப் பயன்படுத்தி யுள்ளனர். இதற்கு முன் இவர்கள் கம்ப்யூட்ட ரையோ, வீடியோ கேம் சாதனத் தினையோ பார்த்தது கூடக் கிடையாது. இந்த திட்டம் வெற்றி அடைந்ததனால், மத்திய அரசு குறைந்த விலையில் டேப்ளட் பிசியினை மாணவர்களுக்கு வழங்கும் திட்டத்தில் சுறுசுறுப்பாக உள்ளது.

படிக்கும் இடங்களில் மின்சாரம் இல்லை. அதாவது அவர்களுக்கு கம்ப்யூட்டர் பயன்பாடு என்பது என்னவென்று தெரியாது என்று இந்த செய்தி நமக்கு அறிவிக்கிறது.

ஆனால், ஹைதராபாத் அருகே உள்ள கிராமங்களில் படிக்கும் மாணவர்கள், ஐ-ஸ்லேட் எனப்படும் ஸ்லேட் பிசியைச் சோதனை முறையில் பயன்படுத்திப் பார்த்துள்ளனர். இவர்களுக்கு மின்சார வசதி

"கவனத்திற்கு"

Web Browser: (வெப் பிரவுசர்) இன்டர்நெட் பயன்பாட்டிற்கு அடிப்படைத் தேவையான இயக்கத் தொகுப்பு எனலாம். இதன் வழியே இணையத்தில் உள்ள பக்கங்களைப் பெற்று பயன் படுத்தலாம். இன்டர்நெட் எக்ஸ்புளோரர், பயர்பாக்ஸ், குரோம், சபாரி, ஆப்பரா போன்ற பிரவுசர்கள் இன்று பிரபலமாய்ப் பயன்படுத்தப் படுகின்றன.

ஒரு சின்ன பெர்சனல் பிரேக்

யு.எஸ்.பி.போர்ட் வழி மிக இலகுவாகவும், எளிதாகவும் இருந்தாலும் பல நேரங்களில் அது சிக்கல்களைத் தருவதாக அமைகிறது. உங்களுடைய விரிவான கட்டுரை இவற்றிற்கான தீர்வுகளைத் தருவதாய் அமைந்துள்ளது.

-சி.கே. கந்தசாமி, சென்னை.

பேஸ்புக் ஏற்கனவே பல பன்னாட்டு நண்பர்களின் பெரிய கூடாரமாக அமைந்து செயல்பட்டு வருகிறது. இதில் இமெயில் வசதியும் தந்துவிட்டால், முழுமையான தனி நட்பு உலகமாக மாறிவிடும். நமக்கிடையே பேதங்களும், வெறுப்புகளும் களைய இது போன்ற முயற்சிகள் தேவை. இதனை வரவேற்போம்.

-இரா. சம்பந்த மூர்த்தி, கோயம்புத்தூர்.

டேப்ளட் பிசி குறித்த தகவல்கள் உற்சாகத்தை அளிக்கின்றன. விலை மட்டும் குறைவாக இருந்துவிட்டால், இன்றைய மொபைல் போன்களைப் போல, இந்தக் கம்ப்யூட்டர்கள் பயன்பாட்டிற்கு வந்துவிடும். தகவல் பரிமாற்றம் என்பது, மூச்சுவிடுவதைப் போல மாறிவிடும்.

-ஆ.தில்லைநாயகம், சென்னை.

வேர்டில் கூட்டலுக்கான டிப்ஸ் மிகவும் பயனுள்ள ஒரு உதவி. மிக்க நன்றி.

-மா. சின்னராஜ் குமார், விருதுநகர்.

வேர்டில் புக்மார்க் என்பது புதிய செய்தியாகவும், மிகவும் பயன்தரத்தக்கதாகவும் உள்ளது. அடிக்கடி இனி பயன்படுத்துவேன்.

-சா. மோகன சுந்தரம், கம்பம்.

தொடரும் டெக்ஸ்ட் இடையே, காலம் ஏற்படுத்தி டெக்ஸ்ட் பார்மட்டிங் மிக அருமையான ஒரு உத்தி. மேலும் டெக்ஸ்ட் விஷயத்திற்கேற்ப இவற்றை அமைப்பதால், சொல்ல வேண்டிய தகவல்கள் நன்றாகக் காட்டப்படும். குறிப்பு தந்தது மிகவும் சந்தோஷம்.

-கே.எல். கிருஷ்ணமூர்த்தி, மதுரை.

பவர்பாய்ண்ட் ஆப்ஜெக்ட் இயக்கம் நல்ல டெக்னிக்கலான கட்டுரை. நேரம் எடுத்து, வரிவரியாகப் படித்துப் புரிந்து கொண்டேன். ஒரு ஆசிரியர் வகுப்பு எடுப்பதைப் போல உள்ளது.

-டி. இசைராணி யுவராஜ், திருப்பூர்.

சின்னத்திரை சீரியல்களில் சிக்கி மக்கள் தங்கள் பொன்னான நேரத்தினை போக்கிக் கொண்டிருக்கிறார்கள். இதில் இணையத்தில் வேறு இந்த வசதியா? சுத்தமாக மக்களை சோம்பேறியாக்கு கிறீர்கள்.

-டி. அனந்த பத்மநாபன், சென்னை.

சீரியல்கள் முன் அமர்ந்து நேரத்தைப் போக்காமல், இணையத்தில் வேறு தகவல்களைப் படிக்கையில், விளம்பரங் களில் நேரத்தை வீணாக்காமல் சீரியல்களைப் பார்க்கத் தரும் முயற்சி பாராட்டப்பட வேண்டிய ஒன்று. தகவலுக்கு நன்றி.

-டி. ஆர். பிரகாஷ், திருத்தணி.

பி.எஸ்.என்.எல். இலவச சிம் குறித்து ஏன் அந்த நிறுவனம் எஸ்.எம்.எஸ். கூட அனுப்பவில்லை. தாங்கள் தகவல் அளித்த பின்னரே, கஸ்டமர் கேர் மையம் சென்று சிம் வாங்கினேன். நல்ல முயற்சி. ஆனால் மக்களுக்கு முறையாக அறிவிக்கப்பட வேண்டும்.

-தே. உஷா ராணி, பொள்ளாச்சி.

இன்டெக்ஸ் தரும் புரஜக்டர் போன்

மொபைல் வர்த்தகம் அல்லது போன் வடிவமைப்பில் ஏதேனும் புதுமைகளைப் புகுத்தி வரும் இன்டெக்ஸ் நிறுவனம் அண்மையில், மொபைல் போனே படம் காட்டும் புரஜக்டராகவும் இயங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட மொபைல் போன் ஒன்றை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. வழக்கம் போல இரண்டு சிம் கார்டு கொண்ட இந்த போனில் ஒரு முறை சார்ஜ் செய்தால், மூன்று மணி நேரம் புரஜக்டராக இதனைப் பயன்படுத்தலாம். இந்த போன் V Show IN8810 எனப் பெயரிடப்பட்டுள்ளது. முழுமையான டச் ஸ்கிரீன் இதில் தரப்படுகிறது. இந்த போன் மூலமாகக் காட்டப்படும் புரஜக்டர் காட்சிகள் மூன்று அடி அகலத்திரை கொள்ளும் அளவிற்கு இருக்கும். மூன்று மணி நேரம் தொடர்ந்து பார்க்கலாம் என்பதால், ஒரு முறை சார்ஜ் செய்து ஒரு திரைப்படத்தினையே பார்க்கலாம். இதில் உள்ள புரஜக்டர் விளக்கு எல்.இ.டி. தொழில் நுட்ப அடிப்படையில் அமைந்தது. 20,000 மணி நேரம் வரை, இதன் திறன் குறையாது. பின்னர், சற்று மங்கத் தொடங்கும்.

இந்த போனில் இரண்டு ஜி.எஸ்.எம் சிம்களைப் பயன்படுத்தலாம். டச் ஸ்கிரீன் திரை 3.2 அங்குல அகலம் கொண்டது. பதிவு செய்யக் கூடிய வீடியோ பிளேயர் தரப்பட்டுள்ளது. டிசம்பர் 1 முதல் ரூ.12,000 அதிக பட்ச விலையிட்டு இது சந்தைக்கு வருகிறது.

சாம்சங் நிறுவனம் இதே போன்ற புரஜக்டர் போன் ஒன்றை முன்பு Beam GT-i8520 என்ற பெயரில் வெளியிட்டது. இதன் உள் நினைவகம் 64 எம்பி. மெமரி கார்ட் மூலம் 16 ஜிபி வரை இதனை அதிகப்படுத்தலாம். விநாடிக்கு 25 பிரேம்கள் கொண்ட வீடியோவினைப் பதிவு செய்திடும் கேமரா தரப்பட்டுள்ளது. வீடியோ சேட் வசதிக்கு முன் புறமாக ஒரு கேமராவும் தரப்பட்டுள்ளது. புரஜக்டர் வசதியுடன் ரூ.12,000 விலையில் மொபைல் கேமரா போன் கிடைப்பது வசதியாகத்தான் தெரிகிறது.

மைக்ரோமேக்ஸ் ஆண்ட்ரோ வெளியானது

ஆண்ட்ரோ ஏ 60 என்ற பெயரில், மைக்ரோமேக்ஸ் நிறுவனம் தன் முதல் ஆண்ட்ராய்ட் சிஸ்டம் கொண்ட மொபைல் போனை வெளியிட்டுள்ளது. இது ஒரு டச் ஸ்கிரீன் கொண்ட, 3ஜியில் இயங்கும் ஸ்மார்ட் போன் ஆகும். இதன் அதிக பட்ச விலை ரூ.6,990 என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மொபைல் போனில் ஆண்ட்ராய்ட் மொபைல் ஆப்பரேட்டிங் சிஸ்டம் பதிப்பு 2.1 பயன்படுத்தப் படுகிறது. 3.2 எம்பி திறன் கொண்ட ஆட்டோ போகஸ் கேமரா உள்ளது. ஸூம் வசதி மற்றும் பிளாஷ் தரப்பட்டுள்ளது. வைபி, ஆக்ஸிலரோ மீட்டர், கிராவிட்டி சென்சார் ஆகியன தரப்பட்டுள்ளன. புளூடூத், ஜி.பி.எஸ். ஆகியன நெட்வொர்க் இணைப்பிற்கு உதவிடுகின்றன. ஜி.பி.ஆர்.எஸ்., எட்ஜ், 3ஜி தொழில் நுட்பங்கள் இணைந்து இயங்குகின்றன. ஆடியோ, வீடியோ பிளேயர்கள் மற்றும் எப்.எம். ரேடியோ இயங்குகின்றன. இதன் உள் நினைவகம் 150 எம்பி திறன் கொண்டது. எஸ்.எம்.எஸ்., எம்.எம்.எஸ். மற்றும் இமெயில் வசதி தரப்பட்டுள்ளது. மெமரி அதிகப்படுத்த மெமரி ஸ்லாட் தரப்பட்டுள்ளது. இதன் பேட்டரி 1280 mAh திறன் கொண்டது. எனவே, 600 மணி நேரம் இதன் மின்சக்தி தங்குகிறது. தொடர்ந்து 4 மணி நேரம் பேசும் திறனை அளிக்கிறது.

சுற்றுப்புறச் சூழலுக்காக நோக்கியா பெற்ற விருது

சுற்றுப் புறச்சூழல் பாதுகாப்பினைத் தன் இந்தியத் தொழிற்சாலையில், சிறப்பாக நிர்வாகம் செய்ததற்காக, நோக்கியா இந்தியா நிறுவனத்திற்கு பன்னாட்டளவிலான 'தங்க மயில் சுற்றுப் புறச் சூழல் விருது 2010' அண்மையில் லண்டனில் வழங்கப்பட்டது. இந்த விருதினை ஆண்டு தோறும் உலகச் சுற்றுப்புறச் சூழல் நிறுவனம் வழங்குகிறது. இதற்கான நிறுவனத்தைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் முன்னாள் இந்திய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி ஜஸ்டிஸ் பகவதி, ஐ.நா. மனித உரிமைகள் ஆணைய உறுப்பினர் கிறிஸ்டி பிரிட்ஸ் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். 380க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் இந்த விருது பெற விண்ணப்பம் அளித்திருந்தன. சுற்றுப் புறச் சூழல் நிர்வாகம், இது குறித்த விதிமுறைகளை மதித்து அமல்படுத்துதல், சுற்றுப்புறச் சூழல் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், அதற்கான தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையில் இந்த விருதுக்கான நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படுகிறது.

இந்த விருது குறித்து,நோக்கியாவின் சென்னை தொழிற்சாலையின் இயக்குநர் குறிப்பிடுகையில், தொடக்கத்திலிருந்தே நோக்கியாவின் ஊழியர்கள் சுற்றுப் புறச் சூழ்நிலை குறித்த அனைத்து நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைத்து வந்தனர். அவர்களின் பங்களிப்பிற்குக் கிடைத்த உயரிய விருது என்று குறிப்பிட்டார்.

பிவிசி இல்லாத சார்ஜர்களை 2006 ஆம் ஆண்டு முதல் நோக்கியா தயாரித்து

வருகிறது. மேலும் 1,400 ரீசைக்கிளிங் மையங்களை அமைத்து, சுற்றுப்புறச் சூழ்நிலையை மாசுபடுத்தாத வகையில் பழைய போன்களையும் துணை சாதனங்களையும் கையாண்டு வருகிறது.

லண்டனில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில், ஸ்வீடன் நாட்டின் முன்னாள் பிரதம மந்திரி உட்பட, பன்னாட்டளவில், பல வி.ஐ.பிக்கள் கலந்து கொண்டனர்.

பிளை பி435 மல்ட்டிமீடியா போன்

பட்ஜெட் மல்ட்டிமீடியா மொபைல் போன்களுக்குப் பெயர் பெற்ற, பிளை நிறுவனம், அண்மையில் பி435 என்னும் போனை விற்பனைக்கு அறிமுகப்படுத்தியுள்ளது. இது ஒரு குவெர்ட்டி கீ போர்டுடன் வடிவமைக்கப்பட்ட போன். மல்ட்டிமீடியா வசதிகளுடன், சோஷியல் நெட்வொர்க் தளங்களுக்கு நேரடி இணைப்பு வசதியினையும் கொண்டுள்ளது. 10.5 மிமீ தடிமனில் மிகவும் ஸ்லிம்மாக (110x57x10.5) 95 கிராம் எடையில் அமைக்கப்பட்டுள்ளது. மிக எளிதாகப் பாக்கெட்டில் போட்டு எடுத்துச் செல்ல விரும்பும் இளைஞர்களுக்கு உகந்தது.

இரண்டு ஜி.எஸ்.எம். சிம்கள் பயன்பாடு, 1.3 எம்பி கேமரா, ஈக்குவலைசர் கொண்ட எம்பி3 பிளேயர், ரெகார்டிங் வசதி கொண்ட எப்.எம். ரேடியோ, ஜி.பி.ஆர்.எஸ்., புளூடூத், W A P பிரவுசர், வீடியோ பிளேயர், எஸ்.எம்.எஸ்., எம்.எம்.எஸ். இமெயில், A2DP இணைந்த புளூடூத், ஜிமெயில் பயன்பாடு, இமேஜ் வியூவர், கால்குலேட்டர், அலாரம், இ-புக் ரீடர், மோடமாகப் பயன்பாடு ஆகிய வசதிகள் உள்ளன. கருப்பு, வெள்ளை என இரண்டு வண்ணங்களில் கிடைக்கிறது. தொடர்ந்து 10 மணி நேரம் பேசக்கூடிய அளவிற்குத் திறன் தரும் பேட்டரி தரப்படுகிறது.

இதன் அதிக பட்ச விலை ரூ. 3,359 மட்டுமே.

வேர்டில் ஸ்லைட் ரெபரன்ஸ்

வேர்டில் டாகுமெண்ட் ஒன்றை உருவாக்கியுள்ளீர்கள். குறிப்பிட்ட இடம் ஒன்றில், நீங்கள் இந்த டாகுமெண்ட்டில் உள்ள தகவல்களைக் காட்டும் வகையில் பிரசன்டேஷன் பைல் ஸ்லைட் காட்டப்பட்டால் நன்றாக இருக்கும் என எண்ணுகிறீர்கள். அப்படியானல் அதற்கான லிங்க்கினை, இந்த வேர்ட் டாகுமெண்ட்டில் அமைக்க வேண்டும். முடியுமா? முடியும் என்றால் எவ்வாறு அமைப்பது, இங்கு பார்க்கலாம்.

இந்த வகையான செயல்பாடு மூலம் எம்.எஸ். ஆபீஸ் தொகுப்புகளுக்கிடையே ஒரு நல்ல இணைப்பு உருவாக்கப்படுகிறது.

1. வேர்ட் டாகுமெண்ட்டில் உள்ள, எந்த டெக்ஸ்ட்டுடன் ஸ்லைடுக்கான ஹைப்பர் லிங்க் ஏற்படுத்த விரும்புகிறீர்களோ, அதனை ஹை லைட் செய்திடவும்.

2. அடுத்து, Insert மெனுவில் Hyperlink என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் இப்போது Insert Hyperlink டயலாக் பாக்ஸினைக் காட்டும்.

3. Link to File அல்லது URL field என்பதில், பவர்பாய்ண்ட் பிரசன்டேஷன் பைலின் முழு பாத் அமைக்கவும். விருப்பப்பட்டால், பிரவுஸ் என்பதில் கிளிக் செய்து, அந்த பைலைத் தேர்ந்தெடுக்கலாம். பைலுக்கான வழிக்கான குறியீடு தானாக அமைக்கப்படும். இந்த குறியீடு எடுத்துக் காட்டாக, C:\My Documents\Presentations\sample.ppt. என அமையலாம்.

4. இந்த பைல் பெயரின் இறுதியில், ஒரு அடையாளத்தை அமைத்து, அதனைத்தொடர்ந்து ஸ்பேஸ் எதுவும் விடாமல் அந்த ஸ்லைடின் எண்ணை அமைக்கவும். எனவே இந்த ஹைப்பர் லிங்க்கிற்கான முழு முகவரி C:\My Documents\Presentations\sample.ppt#42 என அமையலாம்.

5.அடுத்து ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

வேர்ட் 2000 ,வேர்ட் 2002 மற்றும் பின்னர் வந்த தொகுப்புகளில் அமைக்க:

1. ஹைப்பர் லிங்க் இணைக்க விரும்பும் டெக்ஸ்ட்டினைத் தேர்ந்தெடுக்கவும்.

2. அடுத்து, Insert மெனுவில் Hyperlink என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். வேர்ட் இப்போது Insert Hyperlink டயலாக் பாக்ஸினைக் காட்டும்.

3. பின்னர், இந்த டயலாக் பாக்ஸின் இடது பக்கத்தில் உள்ள, Existing File அல்லது வெப் பேஜ் (Web Page) பட்டனில் கிளிக் செய்திடவும்.

4. இனி, Type the File அல்லது Web Page Name பைல் பெயரினை மேலே கூறியவாறு அமைக்கவும்.

5. அதே போல ஸ்லைடின் எண்ணையும் அமைக்கவும். பின்னர், ஓகே கிளிக் செய்து வெளியேறவும்.

ஸ்லைட் எண் தெரியாவிட்டால் என்ன செய்வது? கீழ்க்காணும் வழிகளைப் பின்பற்றவும்.

1. பவர்பாய்ண்ட் பிரசன்டேஷன் பைலைத் திறந்து இயக்கவும்.

2. வேர்ட் டாகுமெண்ட்டில் ஹைப்பர் லிங்க்காக இணைக்க விரும்பும் ஸ்லைடுக்குச் செல்லவும். அதனைத் தேர்ந்தெடுக்கவும்.

3.அடுத்து கண்ட்ரோல்+சி அழுத்தி அதனைக் காப்பி செய்திடவும்.

4.இப்போது வேர்ட் சென்று டாகுமெண்ட்டினைத் திறக்கவும்.

5. எங்கு ஹைப்பர் லிங்க்கினை இடம் பார்த்து வைக்க வேண்டுமோ, அங்கு கர்சரைக் கொண்டு செல்லவும்.

6. அடுத்து, எடிட் மெனு திறந்து, அதில் Paste as Hyperlink என்பதனைத் தேர்ந்தெடுக்கவும்.

7. இந்த ஹைப்பர் லிங்க்கினை நீங்கள் விரும்பும் வகையில் எடிட் செய்து கொள்ளலாம்.

கேள்வி பதில்



கேள்வி:

இப்போது வரும் விளம்பரங்களில் புளூரே டிஸ்க்குகளை இவை இயக்கும் என அறிவிக்கப்படுகிறது. இந்த டிஸ்க்குகள் கடைகளில் கிடைக்குமா? இதன் சிறப்பு என்ன? ஏன் புளூரே என அழைக்கப்படுகிறது?

-தி. மல்லிகா, நாகமலைப் புதுக்கோட்டை

பதில்: பிளாப்பி டிஸ்க், சிடி மற்றும் டிவிடி வரிசையில் மேம்படுத்தப்பட்ட காம்பாக்ட் டிஸ்க்காக (Compact Disc CD) இது வந்துள்ளது. ''சி.டி''., ''டிவிடி'' என்பது போல இவற்றை ''பி.டி'' என அழைக்கின்றனர். வழக்கமான ஒரு டிவிடியில் 4.7 கிகா பைட் தகவல்களை அடைக்கலாம். புளூ ரே டிஸ்க்குகள் 50 கிகா பைட் எனத் தொடங்குகின்றன. இன்றைய இதன் தொழில் நுட்ப வேகத்தினைப் பார்க்கையில் இதைப் போல இரு மடங்கு மற்றும் நான்கு மடங்கு அளவில் கூட இதன் கொள்ளளவு உயரும் என எதிர்பார்க்கலாம். திரைப்படத் துறையில் இந்த பி.டி. மிகவும் பயன்படும். அங்கு உருவாக்கப்படும் டிஜிட்டல் பைல்களின் அளவு மிக அதிகமாக இருக்கும் என்பதால், அவற்றைப் பதிய இவை உதவுகின்றன.நாமும் இவற்றை திரைப்படங்கள் போன்ற பெரிய பைல்களைப் பதிந்து கையாள இதனைப் பயன்படுத்தலாம். மற்ற டேட்டா பைல்களையும் பதியலாம். இவற்றை இதற்கென உள்ள ட்ரேயைப் பயன்படுத்தி இயக்க வேண்டும். புளூ ரே டிஸ்க் என ஏன் அழைக்கிறார்கள்? டிவிடியில் தகவல்களைப் படிக்க சிகப்பு கதிர்கள் பயன்படுத்தப் படுகின்றன. 'பி.டி.' டிஸ்க்கில் தகவல்களைப் படிக்கப் பயன்படும் கதிர்களின் நிறம் புளூ. எனவே தான் இந்தப் பெயர்.

கேள்வி: எக்ஸெல் நான் நன்றாகவே பயன்படுத்துவேன். இப்போது திடீரென செல்லில் எந்த எண் அடித்தாலும், அது தசமஸ்தான எண்ணாக, 5க்குப் பதில் 0.05 என வருகிறது. என்ன செய்தும் மாற்ற முடியவில்லை. தவறு எங்கே உள்ளது.

-ஆ. சிவமாயன், உசிலம்பட்டி

பதில்: தவறு கம்ப்யூட்டர் பயன்படுத்தியவர் ஒருவர் மாற்றி அமைத்த செட்டிங் வழியாக வருகிறது. சரி, தவறினைச் சரி செய்வோம். எக்ஸெல் திறந்து டூல்ஸ் (Tools) மெனு செல்லுங்கள். அங்கு கிடைக்கும் மெனு பட்டியலில் ஆப்ஷன்ஸ் (Options) பிரிவு செல்லவும். இங்கு கிடைக்கும் டேப்களில் எடிட் (Edit) டேப் பினைத் தேர்ந்தெடுக்கவும். கிடைக்கும் விண்டோவில் "Fixed decimal" என்னும் ஒரு ஆப்ஷன் கிடைக்கும். இதன் எதிரே உள்ள சிறிய கட்டத்தில் உள்ள டிக் அடையாளத்தினை எடுத்துவிடவும். இதற்கு மவுஸின் கர்சரை அதன் மீது வைத்து கிளிக் செய்திடவும். இனி நீங்கள் உள்ளிடும் எண்கள் சரியாக அமையும்.

இந்த வசதி ஏன் தரப்பட்டுள்ளது என்றால், தசம ஸ்தானத்தில் மட்டுமே எண்களை அமைக்க வேண்டும் என்கிற நிலையில் 0.08 டைப் செய்திட, இந்த ஆப்ஷனை இயக்கிவிட்டு, 8 என டைப் செய்தால் போதும். இதனையே மூன்று தசம ஸ்தானத்தில் அமைக்க இந்த "Fixed decimal" என்பதில் டிக் செய்தால் கிடைக்கும்

எதிரே உள்ள கட்டத்தில், எத்தனை ஸ்தானங்கள் வேண்டுமோ, அந்த எண்ணை அமைக்க வேண்டும்.

கேள்வி: ரூல் டிப் என்பது என்ன? நீங்கள் ஜஸ்ட் லைக் தட் எழுதிச் செல்கிறீர்கள். விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இதனைப் பெற மெனுவில் எங்கு செல்ல வேண்டும்.

-கா. உதயராணி, கும்மிடிப் பூண்டி

பதில்: ம்..ம். இப்படியெல்லாம் குற்றம் சாட்டப்படுகிறேன். சரி, டூல் டிப் என்பது உங்களின் கம்ப்யூட்டர் பயன்பாட்டில் நீங்கள் அடிக்கடி சந்திக்கும் விஷயம் தான். ஆனால் அதுதான் டூல் டிப் என்று பலருக்குத் தெரியாது. கம்ப்யூட்டரில் ஏதாவது ஒரு ஐட்டத்தின் அருகே மவுஸின் கர்சரைக் கொண்டு செல்கையில் சிறிய மஞ்சள் கட்டம் ஒன்று எழுந்து வரும். அதில் ஏதேனும் ஒரு தகவல் இருக்கும். அதுதான் டூல் டிப் ஆகும். மவுஸ் பாய்ண்ட்டருடன் இணைந்து செயல் படும் சிறிய கிராபிக் கட்டத் தகவலே டூல் டிப். நமக்கு கம்ப்யூட்டரின் சாதனங்களின் பயன் பாடுகள் குறித்து தகவல் தரும் பலகைகளே இந்த டூல்டிப்கள். சில எடுத்துக் காட்டுக்களைப் பார்ப்போம். மானிட்டரில் பொதுவாகக் கீழாக உள்ள சிஸ்டம் டிரேயில் நேரம் காட்டும் இடத்தின் அருகே மவுஸ் கர்சரைக் கொண்டு சென்றால் உடனே தேதியுடன் கூடிய சிறிய மஞ்சள் கட்டம் ஒன்று மேலாக வரும். இதுதான் டூல் டிப்.

விரைவாக புரோகிராம்களை இயக்க வேண்டி அதன் ஐகான்களை குயிக் லாஞ்ச் ஏரியாவில் வைத்திருப்போம். அந்த ஐகான் அருகே மவுஸ் கர்சரைக் கொண்டு சென்றால் அந்த ஐகான் எந்த புரோகிராமுடன் தொடர்பு உடையது என்று தகவல் கிடைக்கும். அதுவே டூல் டிப். இது போல பல டூல் டிப்களை கம்ப்யூட்டரின் ஆப்பரேட்டிங் சிஸ்டம் நமக்கு அளிக்கிறது. சரியா, சகோதரி.

கேள்வி: வெப் சைட்டிலிருந்து டெக்ஸ்ட் ஒன்றைக் காப்பி செய்து வேர்ட் பைலில் பேஸ்ட் செய்கையில், வெப் டெக்ஸ்ட்டில் உள்ள பார்மட்டிங் இல்லாமல் தேவைப்படுகிறது. இதனை எப்படி தவிர்ப்பது? அல்லது காப்பி செய்து பேஸ்ட் செய்வது?

-எஸ். முத்துக் குமார், விழுப்புரம்

பதில்: இணையப் பக்கத்திலிருந்து காப்பி செய்யப் பட்ட டெக்ஸ்ட்டை, வேர்டில் பேஸ்ட் செய்திடுகையில், Edit --> Paste Special என்ற கட்டளையைக் கிளிக் செய்திடுங்கள். இங்கு Unformatted text என்ற ஒரு பிரிவு கிடைக்கும். இதனைத் தேர்ந்தெடுத்து ஓகே கிளிக் செய்தால், நீங்கள் விரும்பியபடி டெக்ஸ்ட் பார்மட்டிங் எதுவும் இல்லாமல் பேஸ்ட் ஆகும்.

கேள்வி:

என்னுடைய இன்டர்நெட் கனக்ஷன் வழி கிடைக்கும் வேகம் சில நேரங்களில் யு-ட்யூப் இணைய தளம் பார்ப்பதில் தாமதத்தை ஏற்படுத்துகிறது. இதனை எப்படி நிவர்த்தி செய்திடலாம்?

-ஆ. சிதம்பர நாதன், மேலூர்.

பதில்: மெதுவாக இயங்கும் இன்டர்நெட் இணைப்பிற்கேற்ப, யு-ட்யூப் தளம் பார்க்கும் வழியில் செட்டிங்ஸ் மாற்றி அமைக்கலாம். முதலில் யு-ட்யூப் டாட் காம் (www.youtube.com) செல்லவும். பின்னர் உங்கள் அக்கவுண்ட்டில் லாக் ஆன் செய்திடவும். அக்கவுண்ட் இல்லை என்றால் ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளவும். மிக எளிதாகவும் வேகமாகவும் அக்கவுண்ட் ஒன்றை ஏற்படுத்திவிடலாம். இதற்கு தளத்தின் வலது மேல் மூலையில் உள்ள Create an Account என்பதில் கிளிக் செய்து, பின்னர் கிடைக்கும் விண்டோவில் கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் கொடுத்து அக்கவுண்ட் ஒன்றை உங்களுக்கென உருவாக்கவும். பின்னர் உங்கள் யூசர் நேம் பயன் படுத்திச் சென்று உங்கள் அக்கவுண்ட்டில் (Account) கிளிக் செய்திடவும். இதனை அடுத்து கிடைக்கும் அக்கவுண்ட் செட்டிங்ஸ் பக்கத்தில், Playback Setup என்பதில் கிளிக் செய்திடவும். வீடியோ பிளே பேக் குவாலிட்டி என்பதன் கீழ், "I have a slow connection. Never play higher quality video" என்று இருப்பதில் டிக் அடையாளம் ஒன்றை ஏற்படுத்தவும். தொடந்து Save changes என்ற பட்டனில் கிளிக் செய்திடவும். இனி, யு-ட்யூப் தளம், நீங்கள் பார்க்க விரும்பும் வீடியோவினை, உங்களிடம் இருப்பது சற்று வேகம் குறைந்த இன்டர்நெட் இணைப்பு என்பதற்கேற்ற வகையில் இயக்கும்.

கேள்வி: பயர்பாக்ஸ் பிரவுசர் பயன்படுத்துகிறேன். இதில் டேப்களுக்கு இடையே நகர்ந்து செல்ல, ஷார்ட் கட் கீகள் உண்டா? அல்லது ஆட் ஆன் மூலம் ஏற்படுத்தலாமா?

-எம். மேரி புஷ்பா, ஸ்ரீவில்லிப்புத்தூர்.

பதில்: உங்கள் விருப்பப்படியே ஆட் ஆன் தொகுப்பினை இன்ஸ்டால் செய்து, டேப்களுக்கிடையே செல்ல ஷார்ட்கட் கீகளைப் பயன்படுத்தலாம். பயர்பாக்ஸ் பிரவுசரைத் திறந்து, https://addons.mozilla.org/en-US/firefox/addon/220875/ என்ற முகவரி யில் உள்ள தளம் செல்லுங்கள். இங்கு MoveTabs என்ற ஆட் ஆன் தொகுப்பு கிடைக்கும். இதனை இணைக்கவும். பின்னர் Control + Shift + Home கீகளை அழுத்தினால் இடது புறம் உள்ள இறுதி டேப் செல்வீர்கள். Control + Shift + End கீகளை அழுத்தினால் வலது புறம் உள்ள இறுதி டேப் செல்வீர்கள். Control + Shift+ Page Up கீகளை அழுத்தினால் இடது புறம் ஒரு டேப் நகர்வீர்கள். Control + Shift+ Page Down கீகளை அழுத்தினால் வலது புறம் ஒரு டேப் நகர்வீர்கள்.

கேள்வி: வேர்ட் டாகுமெண்ட்டில் வழக்கமான பக்க எண்களான 1,2,3 என்பதற்குப் பதிலாக, i,ii,iii என அமைக்க விரும்புகிறேன். இதற்கான செட்டிங் எங்கு உள்ளது? எப்படி அமைப்பது?

-டி. சூசைராஜ், மதுரை

பதில்: எளிதாக அமைக்கலாம். டாகுமெண்ட்டில் பக்க எண் உள்ள இடத்தில் கர்சரைக் கொண்டு செல்லவும். வியூ மெனுவிலிருந்து Header and Footer டயலாக் பாக்ஸைப் பெறவும். இதில் கிடைக்கும் Format Page Number ஐகானில் கிளிக் செய்திடவும். இங்கு Page Number Format டயலாக் பாக்ஸ் கிடைக்கும். இதில் கிடைக்கும் பார்மட்களிலிருந்து நீங்கள் விரும்பும் பார்மட்டைத் தேர்ந்தெடுத்து, பின்னர் ஓகே அழுத்தி டயலாக் பாக்ஸ்களை மூடவும். மீண்டும் மாற்றும் வரை இந்த பார்மட்டிலேயே பக்க எண்கள் அமைக்கப்படும்.

கேள்வி: நாம் பயன்படுத்தும் இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனம், நாம் செல்லும் தளங்களின் அனைத்து விபரங்களையும் பதிந்து வைத்துத் தொடர்ந்து கண்காணித்து வருமா?

-கே. மேகநாதன், திருவேற்காடு.

பதில்: உலக அளவிலான கம்ப்யூட்டர் நெட்வொர்க்கினை உங்களுடன் இணைக்கும் பாலமாக உங்கள் இன்டர்நெட் சர்வீஸ் புரவைடர் செயல்படுகிறார். நீங்கள் பார்க்க விரும்பும் இணைய தள வேண்டுகோள் மற்றும் அனுப்பும் இமெயில் அந்த நிறுவன சர்வர்களின் வழியேதான் செல்கின்றன. எனவே இவற்றை, இந்த நிறுவனத்தால் பதிந்து வைத்துக் கண்காணிக்க முடியும். ஆனால் அப்படி செயல்படுவது என்றால், அனைத்து தகவல்களையும் சேவ் செய்து பாதுகாத்துக் கண்காணிப்பது என்றால், அதற்கு சாதனச் செலவுகள் மிக அதிகமாகும். எனவே சந்தேகப்படும் நபர்கள் குறித்த தகவல்கள் மட்டும், முறையான அரசு வேண்டுகோள் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.